# இரசாயனவியல்

## அணுக்கட்டமைப்பு



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education

# 1.1 அணுக்கட்டமைப்பு மாதிரி உருக்கள்

## கதோட்டுக்கதிர்களின் இயல்புகள்

கதோட்டுக்கதிர் பரிசோதனையை மேற்கொண்டவர் -
சேர் வில்லியம் குறூக்ஸ் (1832 - 1919)



பயன்படுத்திய உபகரணம் - கதோட்டுக்கதிர்க்குழாய் / குறூக்ஸ் குழாய்

கதோட்டுக்கதிர்கள் உருவாக்கும் நிபந்தனைகள்.

- மிகத்தாழ் அமுக்கம் (0.01mmHg )
- உயர் அழுத்தவேறுபாடு (10000v ) (high voltage)
  எனினும் இது வேறுபடலாம்





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## கதோட்டுக்கதிர்களின் இயல்புகள்

**மறையேற்றமுடையது**

மின்புலத்தில் நேர்ஏற்றதகட்டை நோக்கி திரும்பலடையும்.

காந்தப்புலத்தில், எதிரேற்றத்தைக் காட்டும் முறையில் புலத்திற்கு செங்குத்தாக விலகல் அடையும். (பிளமிங் இடக்கை விதி)

**கதோட்டு கதிர்கள் ZnS திரையில் பச்சைநிற புளோரொளிர்வைத் தருவன**

**நேர்கோட்டில் பயணம் செய்யும்**

பாதையில் வைக்கப்படும் தெளிவான ஓரங்களையுடைய ஒளிபுகாப் பொருளின் தெளிவான நிழல் அதன் பின்புறம் தென்படும்.

**பொறிமுறை சக்தியுடையது அதாவது திணிவு,வேகம்(உந்தம்) உடையது.**

இலேசான துடுப்புச்சில்லை சுழற்றும் இயல்புடையது.

**e/m விகிதம் மாறிலி (ஏற்றம்/திணிவு)**

J.J தொம்சன் கதோட்டு கதிர்களில் e/m ஒரு மாறிலி எனவும், அளவறிரீதியாக கதோட்டுக்கதிர்துணிக்கையின் e/m பெறுமானத்தையும் துணிந்தார். $e/m = 1.76 \times 10^{8}\ Cg^{-1}$ இதிலிருந்து எல்லா சடப்பொருளிற்கும் பொதுவான மறையேற்ற துணிக்கை உண்டு. அது இலத்திரன் (electron) எனக்கண்டறிந்தார்.

தொகுப்பு : திரு. ந.கிருபாகரன். ஆசிரியர் - இரசாயனவியல் (யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.)

கணினி வடிவமைப்பு : திரு.இ.. சுகுமார், ஆசிரியர் - த.தொ.தெர, (யா/அருணோதயக்கல்லூரி. அளவெட்டி.)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



## வினாக்கள்

- கதோட்டுக்கதிர்களின் 4 இயல்புகளை சான்றுகளுடன் தருக.
- கதோட்டுக்கதிர்குழாயில் நிரப்பப்பட்டவாயுவிற்கு வாயு கதிரின் e/m விகிதம் வேறுபடுமா? (ஆம்/ இல்லை)
- கதோட்டுக்கதிரின் e/m விகிதம் $1.76 \times 10^{8}$ C/g இலத்திரன் ஏற்றம் $1.602 \times 10^{-19}$C எனின் இலத்திரன் திணிவை கணிக்குக.

## அணு (atom)

- அணு மின்னேற்ற ரீதியில் நடுநிலையானது
- அணு உபதுணிக்கைகளைக்கொண்டுள்ளது.

## அணுவின் உபதுணிக்கைகள் (sub atomic particles)



- இலத்திரன் e
- புரோத்திரன் p
- நியூத்திரன் n

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

| | இலத்திரன் | புரோத்திரன் | நியூத்திரன் |
|---|---|---|---|
| **துணிக்கையின் குறியீடு** | ${}^{0}_{-1}e$ | ${}^{1}_{+1}p$ | ${}^{1}_{0}n$ |
| **துணிக்கையின் திணிவு /kg** | $9.107 \times 10^{-31}$ | $1.6725 \times 10^{-27}$ | $1.6749 \times 10^{-27}$ |
| **துணிக்கையின் சார்பு திணிவு (amu)** | 1/1840 | 1 | 1 |
| **துணிக்கையின் ஏற்றம் (c)** | $1.602 \times 10^{-19}$ | $1.602 \times 10^{-19}$ | 0 |
| **துணிக்கையின் சார்ஏற்றம்** | -1 | +1 | 0 |
| **அறிய உதவிய பரிசோதனை** | கதோட்டுக்கதிர் குழாய் பரிசோதனை | நேர்க்கதிர்ப் பரிசோதனை (கதோட்டு குழாய் சோதனை) | Be தகட்டின் மீது α கதிர் மோதல். |
| **பரிசோதனையை தொடங்கியவர்** | வில்லியம்குறூக்ஸ் | இயூயன்கோல்ஸ்ரைன் | சட்விக் |
| **துணிக்கையை கண்டறிந்தவர்** | J.J .தொம்சன் | இரதபோட் | சட்விக் |
| **துணிக்கையின் ஏற்றம் துணிந்தவர்.** | மில்லிக்கன் | மில்லிக்கன் | — |



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

சட்விக் பரிசோதனையில்

$$^{9}_{4}\mathrm{Be} + {}^{4}_{2}\alpha \rightarrow {}^{12}_{6}\mathrm{C} + {}^{1}_{0}\mathrm{n}$$

## அணுமாதிரியுரு

J-J தொம்சனின் அணுமாதிரியுரு, பிளம்புடிங் மாதிரியுரு, நேர்ஏற்றகோளத்தில் மறைஏற்ற இலத்திரன் காணப்படும்.

## இரதபோட்டின் அணுமாதிரியுரு (அணுவின் கருமாதிரியுரு)

அறிய உதவியபரிசோதனை – பொற்றகட்டுப்பரிசோதனை (gold foil experiment)

பரிசோதனையை மேற்கொண்டோர் :- இரதபோர்ட், கைகர் (Geiger), மாஸ்டன்(Marsden)

## பரிசோதனை

மிக மெல்லிய பொற்றகட்டின் மீது அல்பா கதிர்களை (நேரேற்றத்துணிக்கை) மோதியடித்தல்.






Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பரிசோதனையின் அவதானங்கள்

- பெருமளவிலான $\alpha$ துணிக்கைகள் விலகலின்றி ஊடுருவிச்செல்கின்றன.
- சிறிதளவான துணிக்கைகள் சிறிய கோணத்தினால் விலகலடைந்தன. ($90^0$ க்கு குறைவான)
- மிகச்சிறியளவிலானவை போதிய திசையிலேயே திரும்பி வந்தன.($90^0$ க்கு மேற்பட்ட)

## அனுமானங்கள்

- அணுவின் பெரும்பகுதி வெற்றிடமாக இருத்தல் வேண்டும்.
- அணுவில் நேர்ஏற்றம், திணிவு குவிக்கப்பட்ட மிகச்சிறிய பகுதி இருத்தல் வேண்டும்.

## முடிவு

அணுவின் மையப்பகுதியில் திணிவும் நேரேற்றமும் உடைய பகுதியுண்டு. இதுவே அணுவின் கரு என இரதபோட் முன்மொழிந்தார்.

## வினாக்கள்



- பொற்தகட்டுப்பரிசோதனையில் பொன் பயன்படுத்துவது ஏன் எனக்குறிப்பிட்டு விலகல்கள் ஏற்படுவதற்கான காரணங்களை எழுதுக.
- அணுவின் கருவில் காணப்படும் பிரதானமான அடிப்படை உபதுணிக்கைகள் எவை?

**ஒப்படை**

அணுவின் கருவில் காணப்படும் பிரதானமான உபதுணிக்கைகள் தவிர்ந்த வேறு அற்ப துணிக்கைகள் /கதிர்களை தேடியறிந்து பட்டியற்படுத்துக.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## அணுவெண் (Z) (Atomic number)

ஏதாவது குறிப்பிட்ட மூலகத்தின் அணுவொன்றில் காணப்படும் புரோத்தன்களின் எண்ணிக்கை அணுவெண் எனப்படும். அணுமின்னேற்றரீதியில் நடுநிலையானது. எனவே அணுவெண் அவ்அணுவின் இலத்திரன்களின் எண்ணிக்கையையும் அணுவெண் எனக்கூறலாம்.

அணுவெண் (Z) = புரோத்தன்களின் எண்ணிக்கை = அணுவிலுள்ள இலத்திரன்களின் எண்ணிக்கை (நடுநிலையான)

- அணுவெண் மூலகங்களிற்கு மூலகங்கள் தனித்துவமான எண்ணாகும்.
- மூலகங்களின் அணுவெண்ணை துணிந்தவர் : - H.G.J-மோஸ்லி

## திணிவெண் (A) (Mass number)

ஓர் அணுவிலுள்ள புரோத்தன்களினதும் நியூத்திரன்களினதும் (நியூக்கிளியோன்கள்) கூட்டுத்தொகை அவ்அணுவின் திணிவெண் எனப்படும்.

திணிவெண்(A) = புரோத்தன்களின் எண்ணிக்கை(Z) + நியூத்திரன்களின் எண்ணிக்கை



தொகுப்பு : திரு. ந.கிருபாகரன். ஆசிரியர் - இரசாயனவியல் (யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.)
கணினி வடிவமைப்பு : திரு.இ.. சுகுமார், ஆசிரியர் - த.தொ.தெ, (யா/அருணோதயக்கல்லூரி. அளவெட்டி.)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## நியூக்கிளைட்டு (Nuclide)

புரோத்தன்எண், நியூக்கிளியோன் எண் என்பன வகைகுறிப்பிடப்பட்ட அணு இனங்கள் நியூக்கிளைட்டு எனப்படும்.

$$^{A}_{Z}\mathbf{X}$$




- C அணுவின் நியூக்கிளைட்டு ஒன்றின் குறியீடு $^{12}_{6}C$
- O அணுவின் நியூக்கிளைட்டு ஒன்றின் குறியீடு $^{16}_{8}O$

## சமதானிகள்(Isotopes)

ஒரே அணுஎண்ணைக்கொண்டதும் வித்தியாசமான திணிவெண்களைக் கொண்டதுமான அணுக்கள் குறித்த மூலகத்தின் சமதானிகள் எனப்படும்.




| C அணுவின் சமதானிகள் | $^{12}_{6}C$ | $^{13}_{6}C$ | $^{14}_{6}C$ |
|---|---|---|---|
| சமதானிகளின் சார் இருக்கை அளவு | 98.93% | 1.07% | புறக்கணிக்கத்தக்க அளவு |

சமதானிகளை கண்டறிய உதவியது: திணிவுநிறமாலை பதிகருவி. ஒரு மூலகத்தின் சமதானிகளில் உறுதியான சமதானிகளும், உறுதியற்ற C கதிரியக்க சமதானிகளும் உண்டு. உதாரணமாக $^{14}_{6}C$ உறுதியற்ற கதிரியக்கசமதானி ஆகும்.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



## வினாக்கள்

(1) நியூக்கிளைட்டின் 3 வகைகளை எழுதுக.

(2) 235-U எனும் நியூக்கிளைட்டிலுள்ள புரோத்தன்கள், இலத்திரன்கள், நியூத்திரன்களின் எண்ணிக்கை எத்தனை?

(3) ஐதரசன் மூலகத்தில் காணப்படும் சமதானிகளை எழுதுக.

(4) பின்வரும் நியூக்கிளைட்டுக்களின் புரோத்தன்கள், நியூத்திரன்களின் எண்ணிக்கையை எழுதுக.

$${}^{1}_{1}H \qquad {}^{16}_{8}O \qquad {}^{3}_{1}H \qquad {}^{35}_{17}cl^{-} \qquad {}^{24}_{11}Na \qquad {}^{24}_{12}Mg^{2+}$$

(5) ஒரு மூலகத்தின் சமதானிகளின் இரசாயன இயல்புகள் ஒத்திருக்கும் ஆயினும் பௌதீக இயல்புகள் வேறுபடும் ஏன் என விளக்குக.

### அணுத்திணிவலகு (a.m.u)

சடத்தின் மிகச்சிறிய துண்டுகள் அணுக்கள், அவை திணிவுடையன ஆயினும் அவை மிகச் சிறியனவாதலால் திணிவை குறிப்பிடும் வசதிக்காக அணுத்திணிவு அலகு பயன்படும்.

**வரவிலக்கணம்: 1 amu = $^{1}/_{12} \times {}^{12}C$ சமதானியொன்றின் திணிவு**

**பருமன்: 1 a.m.u = 1.66054 x 10 $^{-24}$ g**

உதாரணமாக இரசாயனரீதியாக சேர்ந்தமையாத

${}^{12}_{6}C$ அணுவின் திணிவு = 12.0000 amu

${}^{1}_{1}H$ அணுவின் திணிவு = 1.0078 amu

${}^{16}_{8}O$ அணுவின் திணிவு = 15.9949 amu





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## அணுத்திணிவு மற்றும் தொடர்பணுத்திணிவு

இயற்கையிலுள்ள பல மூலகங்கள் சமதானிகளின் கலவையாகும். ஒரு மூலகத்தின் சராசரி அணுத்திணிவு, வழமையான அம்மூலத்தின் அணுத்திணிவு என அழைக்கப்படுவது சமதானிகளில் சார்வளப் (சார்பு இருக்கைவீதம்) பின்னப் பெறுமானத்தினால் அவற்றின் திணிவுகளை பெருக்கி பெறப்படும் கூட்டுத்தொகையாகும்.

அணுத்திணிவு = E(சமதானியின் திணிவு x சமதானிகளின் சார் வளப்பின்னம்)

**உதாரணம்**

இயற்கையில் காணப்படும் காபன் ஆனது 98 -93% $^{12}C$, 1.07% $^{13}C$ அத்துடன் புறக்கணிக்கத்தக்களவு $^{14}C$ ஆலும் அமையும். இச்சமதானிகளின் தொடர்பணுத்திணிவுகள் முறையே 12.0000amu, 13.00335amu எனின் காபனின் அணுத்திணிவைத்துணிக.

காபனின் அணுத்திணிவு = 0.9893 x 12.0000 amu +0.0107 x 13.0033amu

= 12.01amu

**மூலர்த்திணிவு**

ஒரு மூல் அணுக்களின் திணிவு அணுவின் மூலர்த்திணிவு எனப்படும்.

**1 mol அணுக்கள் = $6.02214 \times 10^{23}$ அணுக்கள்**

ஆகவே காபனின் மூலர்த்திணிவு = 12.01 $gmol^{-1}$



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## தொடர்பணுத்திணிவு / சாரணுத்திணிவு (Ar)

இது அலகுகள் அற்ற ஒரு பௌதீககணியமாகும்.

ஒரு மூலகஅணுக்களின் சராசரித்திணிவிற்கும் 12-C அணுவின் திணிவின் $^{1}/_{12}$ பகுதிக்கும் இடையிலான விகிதம் அம்மூலக அணுவின் தொடர்பணுத்திணிவு எனப்படும்.

$$\text{தொடர்பணுத்திணிவு} = \frac{\text{மூலக அணுவொன்றின் திணிவு}}{{}^{12}C \text{ சமதானி ஒன்றின் திணிவு} \times 1/12}$$





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk